12—4—1975 to 15—4—1975 } No meeting.

16—4—1975 to 18—4—1975 } Consideration of Official Bills.

The Council will meet daily from 4 p.m. to 7 p.m.

5. கவன ஈர்ப்பு

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மாவட்டங்களில் தாளடி நெற்பயிருக்கு அதிகமான லெவி குறித்து.

THIRU K.S. GANAPATHI: Hon. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Food to a matter of urgent public importance, namely, the very poor paddy yield from the Thaladi paddy crop in the districts of Thanjavur and Tiruchirappalli and the exorbitantly high quantity of paddy levy and the consequent hardship caused to the agriculturists of the district.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1975–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 2–ம் நாள் முதல் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் நிலவி வரும் லெவி விகிதங்கள் பின்வருவன :—

	ஆற்றுப் பாசன வசதி பெற்ற நிலங்கள்.	குளங்கள் சிறு நீர்ப்பாசன வசதி பெற்ற நிலங்கள்.
(1)	(2)	(3)
	குவி.	குவி.
0·50 ஏக்கருக்குமேல் 1 ஏக்கர் வரை ..	0·75	..
1 ஏக்கருக்குமேல் 2 ஏக்கர் வரை	3·50	1·00
2 ஏக்கருக்குமேல் 3 ஏக்கர் வரை	4·50	2·00
3 ஏக்கருக்குமேல் 5 ஏக்கர் வரை	5·70	3·00
5 ஏக்கருக்குமேல் 7 ஏக்கர் வரை	7·00	4·00
7 ஏக்கருக்குமேல்	7·50	4·00

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

திருச்சி மாவட்டம்:

மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியின் குறிப்பின்படி 39,000 எக்கர் நிலங்கள் தாளடி பருவத்தில் பயிரிடப்பட்டுள்ளது. அவற்றில் 75 சத வீதம் சாவி ஆகிவிட்டது.

அரசாணையில் கண்டுள்ள லெவி விகிதங்கள்படி, முன்னதாகவே லெவி முன்னறிவிப்புகள் விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் விளைச்சல் குறைவாக உள்ள இடங்களில் நிலைமையை பரிசீலனை செய்து ஆங்காங்கு லெவி வசூலிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். தாளடிப் பருவத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து லெவி வசூல் வற்புறுத்தப்படவில்லை.

தஞ்சை மாவட்டம்:

தாளடி பயிர் 305,606 எக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஆனால் பஞ்சத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மன்னார்குடி, தஞ்சை, பட்டுக்கோட்டை. ஒரத்தநாடு வட்டங்களில் ஏறத்தாழ 50,000 எக்கர்களில் பயிர் சாவியாகிவிட்டது. விளைச்சல் குறைவாக உள்ள இடங்களில் நிலைமையை பரிசீலனை செய்து ஆங்காங்கு லெவி விகிதங்கள் அதிகாரிகளால் குறைக்கப்பட்டு வருகின்றன.

நம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மிக நெருக்கடியான உணவு நிலைமையை கருத்திற்கொண்டு விவசாய பெருமக்கள் கொள்முதலுக்கு முழு மனதுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, சென்ற மாதம் 26-ம் தேதியன்று அந்த இடங்களைப் பார்வையிட்டு வந்த அதிகாரி, ஐ.ஏ.டி.பி. ப்ரோக்ராம் டைரெக்டர் அவர்கள் அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட எட்டாயிரம் எக்கர் நிலத்திலே தாளடி அறுவடையாகியிருக்கின்றது என்றும் அவற்றிலே சராசரி எக்கருக்கு ஐந்து குவிண்டால், அதாவது 500 கிலோகிராம்தான் விளைந்திருக்கிறது என்றும் சொல்லியிருக்கின்றார். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, அங்கே சாதாரணமாக இரண்டு எக்கர் உள்ளவர்களுக்கே லெவி 4·5 குவிண்டால் என்று போடப்பட்டிருக்கின்றது. விளைவது அதைவிடக் குறைவாக இருக்கும்போது, என்ன செய்ய முடியும் ? அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்கின்றார். ஆனால் போடப்பட்டுள்ள உத்தரவுகளின்படி செயல்படுவதில்லை என்பதுதான் பொதுவாக இருக்கிறது. டி.எஸ்.ஓ. போன்ற அதிகாரிகள் கொள்முதல் செய்வதிலே தீவிரமாக ஈடுபட்டிருப்பதால், அவர்கள் பகலிலே அலுவலகத்திலே இருப்பதேயில்லை. விவசாயிகள் இவற்றால் பெருத்த வேதனைக்குள்ளாகியிருக்கின்றார்கள். இவற்றைப் போக்கவாவது மீண்டும் அரசாங்கம் தெளிவான முறையில் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, லெவி கொள் முதலைப் பொறுத்த மட்டிலே, முன்பு எல்லா இடங்களிலும் மகசூல் நன்றாக இருக்கும் அடிப்படையில் இந்திந்த விகிதத்தில் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் முதலில் உத்தரவிட்டது. இதற்குப் பிறகு மாறிய நிலையில் அதை மறுபரிசீலனை செய்து முன்னர் போடப்பட்ட உத்தரவு திருத்திப் போடப்பட்டது. இதற்குப் பிறகும் பல இடங்களிலே மகசூல் சரியாக இல்லை என்ற குறைசொல்லப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கங்கே சென்று பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றார்கள். விலையைப் பொறுத்தவரையில், விவசாயிகளிடம் குறை இருப்பது உண்மை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, விலை குறைவாக இருக்கும் நிலையில் லெவி நெல்லைப் போடுவதிலே சிலருக்குத் தயக்கம் இருப்பது மனிதசுபாவம்தான். ஆந்திரப் பிரதேசத்திலேயும் லெவி இருக்கின்றது. அங்கே இரண்டரை ஏக்கர் நிலம் வரையில் வைத்திருப்ப வர்களுக்குக்கூட இரண்டு குவிண்டால்தான் லெவி என்று போட்டிருக் கின்றார்கள். பத்து ஏக்கருக்கு மேலே உள்ளவர்களுக்குத்தான் ஐந்து குவிண்டால். இவ்வளவிற்கும் அங்கெல்லாம் அதிகமான விளைச்சல் இருக்கின்றது. ஆனால் இங்கே இரண்டு ஏக்கர் உள்ளவர்களுக்கே நாலரை குவிண்டால் என்று இருக்கிறது. விளைவதே ஐந்து ஏக்கர்தான். இந்த நிலையில்தான் லெவி கொள்முதலைக் கொடுப்பதா வேண்டாமா என்று அவர்கள் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

மாவட்ட ஆட்சியாளர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் தெளிவான உத்தரவு அரசாங்க உத்தரவு கெஜட்டில் வந்திருக்கின்றது. இதற்குப் பிறகாவது ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் பாதிக்கப்பட்ட பகுதி களைச் சென்று பார்த்து, அவர்களுடைய அறிக்கையின் பேரிலே அரசு மீண்டும் மறு உத்தரவினை வெளியிடுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஐந்து லட்சம் டன் முதல் எட்டு லட்சம் டன் வரையில் விளையும் ஆந்திர மாநிலத்தி லேயே—உற்பத்தியாகும் இடத்திலேயே லெவி கொள்முதல் செய்ய வேண்டும் என்று முயற்சித்தும் அதிலே வெற்றி பெறுவதில் பலவகைக் கஷ்டங்களுக்குள்ளாகி, உற்பத்தியாளர்களிடமிருந்து நெல்லைப் பெறுவதற்கு பாதுகாப்புச் சட்டத்தையே பயன்படுத்த வேண்டியிருக்கின்றது என்று நேற்றுதான் ஆந்திர முன்னாள் அமைச்சர் விவசாயச் சங்கத் தலைவரிடம் கூறியிருக்கின்றார். நமது மாநிலம் அவ்வளவு மோசமாக இல்லை. நாம் இப்போது இவ்வளவு கஷ்டப்பட்டும் நமக்கு மூன்று லட்சம் டன் கிடைக்குமா என்பது சந்தேகமாகத்தான் இருக்கின்றது.